LIBRARY
15 OCT 1970
STATE LEGISLATURE

தமிழ்நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1969 மார்ச் 14.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் **கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்–விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மதுராந்தகத்தில் தீயணைப்பு நிலையம்.

*283 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம்** : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகத்தில் தீயணைக்கும் படை ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

திரு. கே. விநாயகம் : மதுராந்தகம் ஒரு தாலுக்கா தலைநகராக இருப்பதாலும் அதைச் சுற்றிலும் பல கிராமங்கள் இருப்பதாலும் அங்கெல்லாம் வீடுகள் குடிசைகள் நிறைய இருப்பதால் தீ விபத்துக்கள் ஏற்படுகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தாலும் அங்கு தீ அணைப்பு ஸ்டேஷன் வைப்பதுபற்றி அந்தத் துறையினர் பரிசீலித்தார்களா ? தயவுசெய்து இந்த ஆண்டிலாவது அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஒவ்வொரு ஆண்டிலும் வருகிற தீ அணைப்பு அழைப்பின் எண்ணிக்கையைப் பொறுத்துத்தான் தீ அணைப்பு நிலையங்கள் வைக்கப்படுகின்றன. புள்ளி விவரப்படிப் பார்த்தால் 1965-ம் ஆண்டு தீ அணைப்பு அழைப்பே இல்லை. 1966-ம் ஆண்டு இரண்டு அழைப்புகள் இருந்தன. 1967-ம் ஆண்டு இரண்டு அழைப்புகள் இருந்தன. 1968-ஆம் ஆண்டு அதாவது 30—7—1968-ம் தேதிவரை மூன்று அழைப்புகள் இருந்தன. ஆகவே அங்கு அழைப்புகள் மிகக் குறைவாக இருக்கிற காரணத்தால் அங்கு இப்போது வைப்பதற்கு அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. ஆர். கருப்பையா : தீ விபத்துக்கள் பொதுவாக கோடைக் காலங்களிலே நிகழ்கின்றன. எனவே கோடைக்காலங்களிலேயாவது ஸ்பெஷலாக தற்காலிக தீ அணைப்புப்படை வைக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதையெல்லாம் ஆய்வு செய்து மேலும் 28 இடங்களில் தீ அணைப்பு நிலையங்கள் வைப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அவைகள் வரிசைக் கிரமமாக அந்தந்த இடங்களிலே வைக்கப்படும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, தீ அணைப்பு நிலையங்கள் தாலுக்கா தலைநகர் அளவிலே இயங்கி வருகின்றன. கும்பகோணத்தைப் பொறுத்தவரை திருப்பனந்தாளிலிருந்து 20 மைலுக்கு அப்பால் பந்தநல்லூர் இருக்கிறது. அங்கே இரண்டு ஆண்டுகளாகத் தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. அப்படி ஏற்படும் தீயை உடனே அணைக்கக்கூடிய முறையில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் எல்லைகளிலும் ஒரு தீ அணைப்பு நிலையம் ஏற்படுத்த அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவ்வளவு விரிவான முறையில் வைப்பதற்கு நிதிநிலை இடம் தராது.

திரு. கொளத்தூர் கோதண்டம்: செங்கல்பட்டிலே மட்டும் தீ அணைப்பு நிலையம் இருக்கிறது. செங்கல்பட்டிலிருந்து 60, 70 மைல் தூரத்திலிருக்கும் கிழக்கடற்கரை ஓரங்களிலே தீ அணைப்பு நிலையங்கள் இல்லாததினாலும், வைக்கோல் போர்கள் இருப்பதாலும், தீ விபத்துக்கள் ஏற்படுகிற காரணத்தினால் இனிமேலாவது தீ அணைக்கும் நிலையங்கள் அங்கே வைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் முதலிலே கேள்விக்குப் பதில் சொல்லும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கையிலே இல்லை. தீ அணைப்புக்காக வருகிற அழைப்புகளின் எண்ணிக்கையைப் பொறுத்துத் தான் தீ அணைப்பு நிலையங்கள் வைக்கவேண்டிய நிலை இருக்கிறது என்று சொன்னேன். மதுராந்தகத்திலே ஒரு ஆண்டு அழைப்பே இல்லாமலும், சில ஆண்டுகளில் இரண்டு மூன்று அளவில்தான் அழைப்புகள் இருந்தன. ஆகவே அந்த இடம் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது 28 இடங்களில் தீ அணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப் படும் என்று சொன்னார்கள். இதிலே கோவில்பட்டியும் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அந்த இடமும் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. தி. பொன்னுமலை: பெரும்பாலும் தீ அணைப்புப் படைகள் நகரப் பகுதிகளிலேதான் இருக்கின்றன. ஆனால் கிராமப் பகுதிகளிலேதான் குடிசைகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, கிராமப் பகுதிகளிலே தீ அணைப்பு நிலையங்கள் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எல்லா இடங்களிலும் தீ அணைப்பு நிலையங்கள் வைப்பது என்பது முடியாத காரியம். மதுராந்தகம் போன்ற தாலுக்கா தலைநகரிலே இது முடியாதது, தேவையில்லாதது என்று இருக்கிற நேரத்திலே ஒவ்வொரு கிராமத்திலே வைப்பது என்பது முடியாத ஒன்றாகும்.

Officer oriented Scheme

* 284 Q.—THIRU A. M. RAJA and THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the Government have introduced the Officer-oriented Scheme in any of the departments of the Secretariat ;

(*b*) if so, the names of such departments ; and

(c) the saving effected thereby, year-war ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) நிதித் துறையில்.

(உ) ஒரு ஆண்டிற்கு ரூ. 1·10 இலட்சம்.

திரு ஏ.எம். இராஜா: தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்திலுள்ள அரசு பதிவுபெறாத அலுவலர்களிடமிருந்து இந்தத் திட்டத்தைப்பற்றி ஏதேனும் கோரிக்கை வந்திருக்கிறதா ? அப்படியென்றால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படி எந்தக் கோரிக்கையும் வர வில்லை.